# ஒரு அணியில் கூட்டணியில் இருந்துகொண்டு, வேறொரு அணியில்

# அமைச்சர் பதவி பெறுவது எப்படி சரி? இது நல்ல அரசியல் நெறிமுறையா?

## சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் சைதையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா கூட்டத்தில் இந்து என்.ராம் கேள்வி!

**சென்னை, ஜூன் 11 –**

**ஒரு அணியில் கூட்டணியிலிருந்து கொண்டு, வேறொரு அணியில் அமைச்சர் பதவி பெறுவது எப்படி சரி? என்றும், இது நல்ல அரசியல் நெறிமுறையா? என்றும் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் – மா.சுப்பிரமணியன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் சைதைத் தேரடித் திடலில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் இந்து என்.ராம் கேள்வி எழுப்பினார்.**

சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா வாழ்த்தரங்க நிகழ்ச்சி சைதை தேரடித் திடலில் 3-6-2026 அன்று மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

இவ்விழாவில் மூத்த பத்திரிகையாளர் இந்து என்.ராம் அவர்கள் கலந்து கொண்டு 'ஒரு அணியில் கூட்டணியிலிருந்துகொண்டு, வேறொரு அணியில், அமைச்சர் பதவி எப்படி சரியானது' என்றும், இது நல்ல அரசியல் நெறிமுறையா? எனவும் கேள்வி எழுப்பி உரையாற்றினார். அவரது உரை வருமாறு:

கலைஞரைப் பற்றி எந்த இடத்தில் ஆரம்பிப்பது என்பதே ஒரு மிகப்பெரிய கேள்வி. சவால் என்றே சொல்லலாம். பன்முகத்தன்மை, நீண்ட ஆயுள், போராட்டக் குணங்கள், பெயர் பெற்ற இந்திய அரசியலில் மிக மூத்தத் தலைவர், ஐந்து முறை முதலமைச்சர், தாம் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்ற ஒரு சிறந்த அரசியல் தலைவர். சிறந்த நிர்வாகி, FILM SCRIPT, FILM NARRATIVE SCRIPT, கவிதை, பல விசயங்களை நமக்குத் தந்தவர். அவரைப் பற்றி பல அம்சங்கள், பல குணங்களைப் பற்றி பேச முடியும்.

அந்த அம்சங்களான போராளி, சிற்பி என்பதைப் பற்றி என்னைவிட சிறப்பாக பேசியிருக்கிறார்கள். கவிதை பற்றி சொல்ல வேண்டுமென்றால், அவர் ஒரு முழுமையான சித்தாந்தம், அரசியல் பாதை இது எல்லாம் அனைவருக்கும் தெரியும். சிறு வயதிலேயே ரொம்ப புத்திசாலி மாணவர். ஆனால் அதிகமாகப் படிக்கமாட்டார்.

அவர் மேற்பள்ளியில் படிக்கவில்லை. கல்லூரிக்குப் போகவில்லை. ஆனால் சிறுவயதிலேயே எழுத்துத் திறமை எங்கியிருந்து வந்தது. இது ஒரு இயற்கைக் கொடை என்று சொல்லலாம். கடினமான உழைப்பு இருந்தது. ஆனால் அது இருந்தால் மட்டும் போதாது. எனக்கும் கடவுள் நம்பிக்கை கிடையாது. ஆனால் சில பேர் வரப்பிரசாதம் என்றெல்லாம் சொல்வார்கள்.


சிறுவயதிலேயிருந்து அயராத உழைப்பு. இது முக்கியமான அம்சம். தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் இந்த கடின உழைப்பு என்பது பொருந்தும். முதலமைச்சராக இருக்கும்போது என்னிடம் ஒரு தடவை மு.க.ஸ்டாலின் கூறினார். வேலை இல்லாமல் இருந்தால் நான் மகிழ்ச்சியாக இருக்க மாட்டேன் என்று. வேலை இருந்து, அதை செய்து களைப்பானாதான் நான் மகிழ்ச்சியாக இருப்பேன் என்று கூறினார்.

### கலைஞரின் பன்முகத் தன்மை!

அந்த உழைப்பு எங்கேயிருந்து வந்தது. அது ஒரு இயற்கைக் குணமாக இருக்கலாம். ஆனால் அது அவர் தந்தையிடமிருந்து கற்ற பாடமாகத்தான் இருந்தது. கடினமான உழைப்பு. அதனால் வேறு மகிழ்ச்சியாக இல்லை என்று அர்த்தம் கிடையாது. கலைஞருக்கு கிரிக்கெட் ரொம்பப் பிடிக்கும். கலைஞருடைய மகன் முன்னாள் முதலமைச்சருக்கும் கிரிக்கெட் பிடிக்கும். அதனால் பன்முகத் தன்மை இருந்தாலும் ஒரு FOCUS, இருந்தது. ஒரு பிடிப்பு என்பது இருந்தது. பிடிப்பு தான் திராவிட இயக்கம்.

பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி நியாபகங்கள் நினைவிற்கு வருகிறது. நான் 1967-68ஆம் ஆண்டில் நியூயார்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருக்கும்போது எம்.எஸ்.சி. இதழியல் படிப்புப் படித்தேன். அப்போது அண்ணா அவர்கள் முதலில் அமைச்சராகி அமெரிக்காவிற்கு வருகிறார். வாஷிங்டன் சுற்றுப் பயணத்திற்கு அண்ணா சென்றார். அவரோடு நானும் சென்றேன். அப்போது அவருடைய குணநலன்களைத் தெரிந்து கொண்டோம்.

ரொம்ப எளிமையாக இருப்பார். மிகவும் அன்பாக இருப்பார். வெளியூரில் வந்து ரொம்ப வார்த்தைகளை அளந்து பேசுவார். ஆனால் இங்கு மிகவும் கூர்மையாக பேசுவார். இந்திய அரசாங்கத்தை நான் கண்டிக்கவோ, விமர்சிக்கவோ நான் இங்கு வரவில்லை



என்று தெளிவாகச் சொன்னார். அப்போதுதான் கலைஞர் அவர்களுடைய அறிமுகமும் கிடைத்தது.

ஆனால் எனக்குத் தெரிந்து அரசியலில் தொடங்கியதிலிருந்து நக்கீரன் கோபால் அவர்கள் சொன்னதுபோல, 85, 86 வயது வரையிலும், ஒரு எழுத்து என்பது கலைஞர் அவர்களுடைய வாழ்க்கையின் ஒரு பகுதி. ஆர்.கே.நாராயணன் என்ற ஒரு பெரிய எழுத்தாளர் என்னிடம் சொன்னார். ஒரு எழுத்தாளர் எப்படி உருவாகுவார்? சிந்தித்தால் மட்டும் போதாது. ஆனால் சிந்திப்பதை எழுதுவது மிகவும் முக்கியம். WRITER MUST WRITE. IT IS LIKE YOGA. இதுதான் பத்திரிகையாளர் கலைஞர் அவர்களுடைய சாராம்சம்.

### பத்திரிக்கைகளுக்கு மதிப்பு கொடுப்பவர் கலைஞர்!

தினந்தோறும் கலைஞர் எழுதுவார். தினந்தோறும் 4 மணிக்கெல்லாம் எழுந்து தினசரிகளையெல்லாம் படிப்பார். இந்து பத்திரிக்கையைப் படித்து விட்டு, அதிகாரியோடு பேசுவார். ஏதாவது தவறு நடந்தால், ஏதாவது ஒரு விபத்து நடந்தால், ஏதாவது கேப் இருந்தால் உடனே அதை படிச்சுச் சொல்லனும். ஒரு பத்திரிகையாளர் கலைஞரைப் போய் சந்திக்கிறார் என்றால், பத்திரிகையைப் படித்துவிட்டுதான் போக வேண்டும். ஆங்கிலப் பத்திரிகையும் படிப்பார். தமிழ்ப் பத்திரிகையும் படிப்பார். பத்திரிகைகளுக்கு ஒரு மதிப்புக் கொடுக்கக்கூடிய அரசியல் தலைவர் கலைஞர் அவர்களைத் தவிர எனக்குத் தெரிந்து வேறு எவரும் இருந்ததில்லை.

ஏ.எஸ்.நம்பூதிரி பாத்திருக்கிறேன். அவரும் ஒரு எழுத்தாளர். நன்றாக அணுகக்கூடியவர். சித்தாந்தம் இருந்தால்கூட. கலைஞர் அவர்களுடைய பெருமையை. கலைஞர் ஒரு அரசியல் தலைவர். மாநில முதலமைச்சர். அகில இந்திய அளவில் ஒரு முக்கியமான சிற்பி. குறிப்பாக ஒரு COLITION என்றால் எப்படி நடக்க வேண்டும்? அதற்கு ஓர் எடுத்துக் காட்டு. சிலவற்றில் விட்டுக்கொடுக்கலாம். ஆனால் அடிப்படையானவற்றை விட்டுக்கொடுக்கக் கூடாது.

இன்றைக்கு இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி, குறிப்பாக ராகுல்காந்தி அதற்கு நேர்மாறாக நடந்துகொள்ளக்கூடியவர். இதை பகிரங்கமாக சொல்லலாம். சோனியாகாந்தியின் தலைமையில் கூட்டணியில் இருக்கும்போது நிலைப்பாடு வேறு. பா.ஜ.க.விற்கு எதிராக இருக்கக்கூடிய கூட்டணி. மதவாதச் சக்திகளுக்கு எதிராக, பிரிவினையைக் கொண்டுவரக்கூடிய சக்திகளுக்கு எதிராக, இருக்கக்கூடிய ஒரு கூட்டணி. நன்றாகத்தான் இருந்தது கூட்டணி. சில பாதிப்புகள் இருந்திருக்கலாம். சில பேர் போயிருக்கலாம். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் நன்றாக இருந்தது.

### இது என்ன அரசியல் நெறிமுறை?

ஆனால் இன்றைக்கு அப்படியா நடக்கிறார்கள். ஒரு அணியில் கூட்டணியிலிருந்துகொண்டு, வேறொரு அணிக்கு மந்திரி பதவி பெறுவது எப்படி சரி? இது என்ன அரசியல் நெறிமுறைகளுக்குப் பொருந்துமா? இந்த மாதிரி இருந்தால் யார் உங்களை நம்புவார்கள்? இதனால் எதிர்காலத்தில் டெல்லியில் வேறு கொள்கை. தமிழ்நாட்டில் வேறு கொள்கை என்று இருக்க முடியுமா?

ஆனால் நான் பத்திரிக்கையாளராக இருக்கும்போது ஒரு விசயத்தை மட்டும் விமர்சித்திருக்கிறேன். 1999-ஆம் ஆண்டு செல்வி ஜெயலலிதா அவர்கள் வாஜ்பாய் அரசிற்கு ஆதரவு கொடுக்காமல் விலகினார். அரசாங்கம் கவிழ்ந்தது. இது தவறான முடிவுதான். இன்றைக்கும் சொல்கிறேன். தி.மு.க அன்றைக்கு NATIONAL DOMACRATIC ALLIANCE என்ற பெயரில் இருந்தது. நான் கலைஞரிடம் சொல்லியிருக்கிறேன். அதைப் பற்றி எழுதியிருக்கிறேன். அதை சரிசெய்து கொண்டு ஜெயலலிதா அவர்கள் 2003-ஆம் ஆண்டு சரியான பாதைக்கு வந்துவிட்டார்.

இந்த மாதிரி விசயங்களையெல்லாம் நாம் பேச முடியும். விவாதிக்க முடியும். அப்படிப்பட்ட ஒரு சிறந்த தலைவர். அறிவுஜீவி, எழுத்தாளர், படைப்பாளி, அதுதான் நம்முடைய கலைஞர். அதுதான் நமக்கு முக்கியத்துவம்.

### கலைஞரின் ஜனநாயக முறை!

காலையில் கலைஞர் எனக்கு தொலைபேசியில் பேசுவார். ஏன் விட்டு விட்டீர்கள். அதைப் பற்றி பேசலாம் என்றால் உடனே சரி என்று சொல்லிவிடுவார் கலைஞர். அதுதான் ஜனநாயக முறை. அதைசெய்யக்கூடிய சிறந்த தலைவர் கலைஞர். அவருடைய எழுத்துக்களைப் பற்றி பல மணி நேரம் பேசலாம். ஏனென்றால் அவ்வளவு வார்த்தைகள். அவ்வளவு தொகுதிகள் எழுதியவர்கள். மிக குறைந்த எண்ணிக்கையிலானவர்கள்தான்.

மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, இ.எஸ்.நம்பூதிரியார் இருந்திருக்கிறார்கள். இவர்களெல்லாம் எழுத்தாளர்கள். பாலகங்காதரத் திலக் இருந்திருக்கிறார்கள். பல ஆசிரியர்கள், போராளிகள், எழுத்தின் மூலம், பத்திரிகையின் மூலம், பேச்சின் மூலம். இன்றைக்கு டிஜிட்டல் முறை இருக்கிறது. கலைஞர் இருந்திருந்தால், அதையும் பயன்படுத்தியிருப்பார். அதாவது அதை அடித்தளங்களை பயன்படுத்தியதில் கலைஞர்அவர்கள் இயற்கை கொடை என்று சொல்லலாம்.

அவருடைய எழுத்துக்கள் எப்படி இருக்குமென்றால், படிக்கக் கூடிய விதத்தில் இருக்கும். ஆழமான கருத்துகள் இருந்தாலும், அதை எப்படி சுவாரஸ்யமாக வெளிப்படுத்துவது என்பதில் மிகவும் திறமை வாய்ந்தவர் கலைஞர். அதில் ஒரு மனிதம் இருக்கும். அதாவது ஒரு கோபம் இருக்கும்போது, கலைஞர் எழுதியதைப் படித்தால், சகஜநிலைக்கு வந்துவிடலாம்.

இந்து பத்திரிக்கையின் நிருபர் திரு. கோலப்பன் ஒரு கதையைச் சொன்னார். முதல்வராக இருந்த காலத்தில் பெரும்பாலும் பத்திரிகையாளர் சந்திப்பு கோட்டையில் அல்லது அறிவாலயத்தில் நடக்கும். இச்சந்திப்புகள் சுவாரஸ்யமானவை. ஒரு முறை திரு.கோலப்பன் அவர்கள் கலைஞரிடம் ஒரு கேள்வியை அதாவது, நாகப்பட்டினம் தொகுதியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கொடுப்பதில் என்ன சிக்கல் என்று, 1994-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் - பத்திரிகையாளர் சந்திப்பில் கேட்டிருக்கிறார்.

### நாகப்பட்டினமும் - சிக்கலும்!

அதற்கு முன்பு பி.ஜே.பியோடு இருக்கும்போது தி.மு.க வேட்பாளர் வெற்றி கண்டார். 2004-ஆம் ஆண்டும் அவர்தான் வெற்றி பெற்றார். அதற்குப் பதிலாக உடனடியாக கலைஞர் சொல்லியிருக்கிறார். நாகப்பட்டினம் பக்கத்தில்தான் சிக்கல் இருக்கிறது. சிக்கல் ஊர் இருப்பதை நகைச்சுவையுடன் சொல்லி, கூட்டணியில் இருக்கும் கோபத்தைக் குறைப்பதற்கு முயற்சி செய்தார்.

இன்னொரு கேள்வி, தமிழ்நாட்டில் தி.மு.க.வுடன் பா.ஜ.க. சித்தாந்தப் போர் நடத்துவதாக அறிவித்துள்ளதே என்று கேட்டதற்கு, உடனே கலைஞர் சொல்லிய பதில், தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஓர் BORE. அதாவது அந்தக் கட்சி ஒரு போரடிக்கும் கட்சி என்று அன்றைக்கு சொல்லியது இன்றைக்கும் பொருந்தும்.

மற்றொரு கேள்வி, ம.தி.மு.க.வுடன் கூட்டணி பரபரப்பாக இயங்குகிறது. உங்கள் கூட்டணி ஏன் பரபரப்பாக இயங்கவில்லை என்று கோலப்பன், கலைஞரிடம் கேட்டார். உடனே கலைஞர் அவர்கள் "எங்கள் கூட்டணி சமைத்து ஹாட்பாக்கில் வைக்கப்பட்டுள்ளது. நாங்கள் காய்கறி வாங்கவோ, பல சரக்கு வாங்கவோ, ஓட வேண்டிய தேவை இல்லை" என்று பதிலளித்தார்.

அவர் எழுத்துக்களைப் பற்றி பேச வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அவருடைய எழுத்துக்கள் திரைப்படத்துறையிலும், வசனங்கள், உணர்ச்சிப்பூர்வமான கவிதைகள், அண்ணா அவர்கள் மறைவிற்குப் பிறகு அவர் எழுதிய இரங்கற்கவிதையின் வார்த்தைகள், இன்றும் அண்ணாவினுடைய நினைவிடத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் பார்த்தால், இவரைவிட ஒரு சிறந்த பத்திரிகையாளரோ, எழுத்தாளரோ, அரசியல் துறையில் இந்தியாவைப் பொறுத்தவரையில் கலைஞரைப் போன்று இருந்தாக எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் உச்சத்தில் இந்தியாவில் இரண்டு, மூன்று எழுத்தாளாராக இருப்பார்.

கடைசி செய்தி என்பது, அவருடைய வாழ்க்கையையும், அரசியலையும், நிர்வாகத் திறமையையும், திராவிட இயக்கத்திற்காக எழுதியவை, பேசியவை, எழுத்து என்பதை தனியாகப் பார்க்க முடியாது. சில எழுத்தாளர்கள் அரசியலை உள்ளே கொண்டு வரமாட்டார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் முழுவதும் அரசியலைச் சார்ந்தே இருக்கும். அவருடைய எழுத்துக்களில் பல விசயங்களை ஆராய்ந்து நாம் கற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்து, இவ்விழாவிலே என்னைப் பங்கெடுக்க வாய்ப்பு வழங்கிய என் நண்பர் மா.சு. அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞருடைய புகழ், கலைஞருடைய சாதனைகள், கலைஞருடைய குணங்கள், எல்லாவற்றையும் ஆண்டுதோறும் கொண்டாட வேண்டும். பொது மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். அன்றிருந்த அரசியல் நிலைக்கும், இன்றிருக்கிற அரசியல் நிலைக்கும் உள்ள தொடர்பையும் எடுத்துக்கூற வேண்டும் என்று தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

இவ்வாறு இந்து என்.ராம் அவர்கள் உரையாற்றினார்.